புதுமலர்: 20 இதழ்: 02 பங்குனி - சித்திரை

# அனல்

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்:**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

01.03.2023

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா




சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. சிறுவர் வட்டம்
05. குறுக்கெழுத்துப்போட்டி - 112
06. வாலிபர் வளாகம்
07. வினா விடை - 114
08. பெண்கள் பக்கம்
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. அநீதியை சகித்தல்




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:


சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

அன்பின் வாசக உள்ளங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். புதுவருடத்திலும் இரண்டு மாதங்களைக் கடந்துவிட்டோம். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

ஆவிக்கும் மாமிசத்துக்குமான போராட்டத்தில் நாம் எதனாலே மேற்கொள்ளப்பட்டோம்; எதிலே வீழ்ந்தோம். தேவ பிள்ளைகளாக ஆரம்பித்த கிறிஸ்தவ விசுவாச ஓட்டம் எந்தளவில் செல்கின்றது.

**(மத்தேயு 3:16-17) இயேசு ஞானஸ்நானம் பெற்ற போது வானம் திறக்கப்பட்டு, தேவ ஆவியானவர் புறாவைப் போல இறங்கி இயேசு மீது வந்தார். அத்துடன் இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாய் இருக்கிறேன்.**

**(மத்தேயு 17:1-5) மலையில் மறுரூபமானபோதும் இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாய் இருக்கிறேன் என்ற சத்தம் பிதாவிடமிருந்து வந்தது.**

தேவனுடைய பிள்ளைகளாய் எமது வாழ்வும் ஒரு தடவை தவறற்ற வாழ்வு வாழ்ந்து பின்பு தவறுள்ள வாழ்வு வாழ்வதல்ல. தேவனுடைய பார்வையில் அவருக்குப் பிரியமான வாழ்க்கை எப்போதும் காணப்பட வேண்டும். நதியிலே தேவனிடமிருந்து பெற்ற சாட்சியை மலையிலும் பெறவேண்டும். உங்கள் வாழ்வின் தாழ்மையிலும், மேன்மையிலும் சாட்சியைக் காத்துக் கொள்ளுங்கள். தாழ்வின் பகுதியில் தேவனுடைய சித்தத்தின் மேன்மையைக் கொண்டிருங்கள். உயர்வின் பகுதியிலும் தேவனுடைய சித்தத்தின் தாழ்மையைக் கொண்டிருங்கள்.

யோவான்ஸ்நானகன் தடுத்த போதும் அவனுடைய கையாலே ஞானஸ்நானம் பெற்றார். இது இயேசுவின் மேன்மை. மறுரூபமலையில் பேதுரு கூடாரம் போட்டு அங்கேயே தங்குவோம் என்ற போது அவர் இறங்கினார். தேவனிடம் சாட்சி பெறவேண்டுமானால் தூய்மையோடும், தாழ்மையோடும் அவருடைய சித்தம் செய்ய வேண்டும்.

கல்வாரி மலையிலே சிலுவையில் இயேசு தொங்கி மிகவும் வியாகுலமடைந்திருந்த போது பிதா சாட்சி கூறவில்லை. மாறாக தன் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

இயேசு என்ன கூறினார்; **(மத்தேயு 27:46) 'என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்'** இயேசு மிகவும் கொடுமையான பாடுகளுக்குள்ளாக சென்ற போது பிதாவின் சத்தம் கேட்கவில்லை. ஆனால் பிதாவின் சித்தம் செய்யாமல் அவர் விடவில்லை. மனுக்குலத்தின் மீட்புக்கான கிரயத்தை இயேசு செலுத்தினார்.

எமது கிறிஸ்தவ ஓட்டம் பூரண நிறைவுடன் நிறைவேற வேண்டுமானால் உங்களைப் பூரணமாக தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள். இயேசு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். மரணத்தில் சித்தத்தை நிறைவேற்றியவர் உயிர்ப்பின் மூலம் வெற்றி சிறந்தார்!.

~ **ஆசிரியர்** ~


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கவலைகளை விட்டொழியுங்கள்!

❒ வை. விமலதாஸ்

ஒரு பாம்பு வளைந்து நெளிந்து தரையில் ஊர்ந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த ஒரு குட்டிக் குரங்குக்கு வேடிக்கையாக இருந்தது.

மெதுவாகப் போய் அந்தப் பாம்பை குரங்கு கையில் பிடித்து விட்டது.

பாம்பும் குரங்கின் கையை இறுக்கமாகச் சுற்றிக் கொண்டது. அது தன் விஷப் பல்லைக் காட்டி சீறியது.

குரங்குக்குக் கொஞ்சம் பயம் வந்து விட்டது.

கொஞ்ச நேரத்திலேயே அதன் கூட்டமெல்லாம் கூடி வந்து விட்டன. ஆனாலும் யாருமே குட்டிக் குரங்குக்கு உதவ முன்வரவில்லை.

'ஐயையோ. இது பயங்கரமான விஷமுள்ள பாம்பு; இந்த பாம்பு கொத்தினால் உடனே மரணந்தான்.

குரங்கு பிடியை விட்டதுமே பாம்பு குரங்கை கொத்திவிடும். இனி குரங்கால் தப்பிக்கவே முடியாது'

என்று குட்டிக் குரங்கின் காதுபடவே பேசிவிட்டு குரங்குகள் ஒவ்வொன்றாகக் கலைந்து சென்று விட்டன.

தன்னுடைய கூட்டமே தன்னைக் கைவிட்டுவிட்ட சூழ்நிலையின் வேதனை, எந்த நேரமும் கொத்திக் குதறத் தயாராக இருக்கும் நச்சுப் பாம்பு, மரண பயம் எல்லாம் சேர்ந்து குரங்கை வாட்டி வதைத்தன.

'ஐயோ! புத்தி கெட்டுப் போய் நானே வலிய வந்து இந்த மரண வலைக்குள் மாட்டிக் கொண்டேனே'.

குரங்கு பெரிதாய்க் குரலெழுப்பி ஓலமிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் ஓடிக் கொண்டே இருந்தது . உணவும், நீரும் இல்லாமல் உடல் சோர்ந்து போய்விட்டது.

கிட்டத்தட்ட குரங்கு மயங்கி சரியும் நிலைக்கு வந்து விட்டது. அதன் கண் இருளத் தொடங்கியது.

அந்த நேரத்தில் ஒருவர் அந்த வழியே வந்தார்.

அவர் குரங்கு இருந்த நிலைமையைப் பார்த்ததும் நடந்ததை உணர்ந்து கொண்டார். குரங்கை நெருங்கி வந்தார்.

அதன் சொந்தங்களெல்லாம் கைவிட்டுவிட்ட நிலையில், தன்னை நோக்கி மனிதர் ஒருவர் வருவதைக் கண்ட குட்டிக் குரங்கிற்கு சற்று நம்பிக்கை வந்தது.

அவர் நெருங்கி வந்து சொன்னார், 'எவ்வளவு நேரந்தான் பாம்பைக் கையிலேயே பிடித்து கஷ்டப்படப் போகிறாய்? அதைக் கீழே போடு' என்றார்.

குரங்கோ, 'ஐயையோ, பாம்பை நான் விட்டுவிட்டால் அது என்னைக் கொன்றுவிடும்' என்றது.

அவர் மீண்டும் சொன்னார், 'நீ கையில் பிடித்திருக்கும் பாம்பு செத்து நீண்ட நேரமாகிவிட்டது. அதைக் கீழே போட்டுவிடு'. அவர் வார்த்தையைக் கேட்ட குரங்கு பயத்துடனே பிடியைத் தளர்த்தி பாம்பைக் கீழே போட்டது.

ஆம் உண்மையாகவே பாம்பு ஏற்கனவே குரங்குப் பிடியில் செத்துத்தான் போயிருந்தது. அப்பாடா.

அப்போது தான் குரங்குக்கு உயிர் வந்தது. குரங்கு அவரை நன்றியுடன் பார்த்தது. இனிமேல் இந்த முட்டாள் தனம் பண்ணாதே என்றபடி அந்த மனிதர் கடந்து போனார்.

ஆம் நண்பர்களே பாருங்கள் அந்தக் குரங்குக்குட்டியைப் போல நம்மில் எத்தனையோ பேர் மனக்கவலை என்ற செத்த பாம்பைக் கையில் பிடித்து அதனை விட முடியாமல் கதறிக் கொண்டிருக்கிறோம். மனக்கவலைகளினால் அனேக வியாதிகளுக்கும் பயங்களுக்கும் உட்பட்டவர்களாய் கூட இருக்கிறோம். தேவன் எம்மை விசாரிக்கிறவராய், கண்காணிக்கிறவராய் இருப்பதனால் நீங்கள் கவலைப்படாமல் அவரை நோக்கிப்பாருங்கள்.

**1பேதுரு 5:7 அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்ந்திருப்பவர்களுக்காக சாயும் தேவன்



☐ பர்னபா




கிறிஸ்துக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு இனிய வாழ்த்துக்கள். வேகமாக இரண்டு மாதங்களைக் கடந்து வர கர்த்தர் கிருபை செய்தார். நாட்டின் நிலைமைகள் மோசமானதாக இருந்தாலும் மோசம் வராமல் கர்த்தர் நம்மை நடத்தினார். கர்த்தருக்கே மகிமையுண்டாகட்டும் - ஆமென்.

**சங்கீதம் 40:1 கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்.**

ஆம் பிரியமானவர்களே தேவனுடைய மனுஷன் தாவீது சொல்கிறார்; 'நான் பொறுமையுடன் காத்திருந்தேன், கர்த்தர் என்னிடமாக சாய்ந்தார்' என்பதாக.

பல வேளைகளில் நாம் தேவன் கிரியை செய்யும்படி காத்திருப்போம். ஆனால் "பொறுமையுடன்" காத்திருப்பதில்லை. பல முறுமுறுப்புக்கள், பலதரப்பட்ட முயற்சிகள், எம்முடைய அறிவுக்கெட்டிய அபிப்பிராயங்கள் என பல கேள்விகளுடன் காத்திருப்போம். இப்படியாக காத்திருப்பு தேவனை நம் பக்கம் சாயும்படி செய்யாது. மாறாக தேவன் நமக்காக செயற்படாதபடி மாற்றிவிடும்.

கிட்டத்தட்ட பதினாறு வயதிலே தாவீது சாமுவேலின் மூலமாக சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக இருப்பதற்காக தேவனால் அபிஷேகம் பண்ணப்படுகின்றான். ஆனாலும் இராஜ்ஜய பாரம் உடனடியாக தாவீதின் கைக்கு கிடைக்கவில்லை. கிடைக்கவேண்டுமென்று சொல்லி தாவீதும் எவ்விதத்திலும் ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. அவனுக்காக செயற்பட யாரையும் தாவீது அனுமதிக்கவுமில்லை. மாறாக அபிஷேகித்தவர் தமது காரியங்களை தமது திட்டத்தின்படி அவரது நேரப்படி நடத்தி முடிக்கும் வரைக்கும் கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருந்தான். கர்த்தரும் அவன் பக்கமாக சாய்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பதாவது வயதிலே பதிலைக் கொடுத்தார். தாவீதும் ராஜாவானான்.

சவுலைக் கொன்று தேவனுடைய காலத்திற்கு முன்பே ராஜாவாக மாறு வதற்கு தாவீதிற்கு பல தருணங்கள் கிடைத்தது. ஆனாலும் கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருந்தான். கர்த்தர் அவன் பக்கமாக சாய்ந்தார். எல்லா வற்றையும் இலகுவாக முடியப்பண்ணி இராஜ்யத்தை தாவீதின் கரத்தில் உறுதிப்படுத்தினார்.

ஆம் அன்பானவர்களே உங்களுடைய வாழ்க்கையிலும் கர்த்தர் வாக்குத்தத்தங்கள் பலவற்றை தந்திருக் கலாம். மற்றவர்களின் மூலமாக அதை உறுதிப்படுத்தியுமிருக்கலாம். ஆனாலும் தேவனுடைய வேளை வரைக்கும் பொறுமையுடன் காத்திருங்கள்.

காத்திருக்காமல் கிடைப்பது நம்மை கதிகலங்க வைக்கும்.

காத்திருந்து சரியான நேரம் பெற்றுக் கொள்வது எம்மை கனமுள்ள வர்களாக மாற்றும். அதனாலே தான் தேவன் தாவீதைப் பார்த்துச் சொன்னார். **11சாமுவேல் 7:9 பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்துக்கு ஒத்த பெரிய நாமத்தை உனக்கு உண்டாக்கி னேன்** என்பதாக.

பிரியமான சகோதர சகோதரி களே உங்களுடைய வாழ்க்கையிலும் கர்த்தர் உங்கள் பக்கமாக சாய விரும்பு கின்றீர்களா?

உங்களுக்கு வரும் வேதனை கள், நிந்தனைகள் காரணமில்லாத காயப்படுதல்கள், புரிந்து கொள்ளாமை கள், துரத்தப்படும் நேரங்கள், அவ மானங்கள் ஆகிய இப்படிப்பட்ட நேரங்களிலே கர்த்தருக்காக பொறுமை யுடன் காத்திருங்கள்.

நாம் நம்முடைய பெலத்தை, பணத்தை, சுற்றியிருப்பவர்களை, அறிவை, தந்திரத்தை, நுட்பத்தை, அனுபவத்தை சார்ந்து சாயும் போது தேவன் நம் பக்கமாக சாயமாட்டார்.

மாறாக யார் தமக்காக பொறு மையுடன் காத்திருக்கிறார்களோ அவர் களுக்காக தேவன் சாய்ந்து அவர்கள் கூப்பிடுதலுக்கு செவி கொடுப்பார்.

**எபிரெயர் 6:15 அந்தப்படியே, அவன் பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்.**

சில பிரச்சினைகளுக்கு நல்ல தோர் தீர்வு வேண்டுமா? பொறுமை யோடு அமைதியாக கர்த்தருக்காக காத்திருங்கள். ஆசீர்வாதத்தைக் காண்பீர்கள். ஒரு கட்டத்தில் அவசரப் பட்ட ஆபிரகாம் பின்பு அதனால் அவதிப்பட்டார்; உணர்வடைந்து பின்பு பொறுமையோடு 14 ஆண்டுகள் காத்திருந்தார்.

கர்த்தர் ஆபிரகாமை நகைக்கும் படி செய்து சிரிப்பவன் என்ற அர்த்தம் கொண்ட ஈசாக்கை பரிசாக கொடுத்தார்.

ஆம் அன்பானவர்களே, நீங்களும் உங்களுடைய வாழ்க்கை யில் கர்த்தர் சாய்ந்து செயலாற்றும்படி பொறுமையுடன் காத்திருங்கள். அற்புதத்தைக் காண்பீர்கள்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






☐ ஜசிந்தா அக்கா




அம்மா பசிக்கிறது.. அம்மா... அம்மா... பசிக்கிறது..!

என்று ஓர் ஏழைத் தம்பி பசியினால் துடித்தான். பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க முடியாத ஏழ்மை நிலையில் பெற்றோர் இருந்தார்கள். 'எங்கேயாவது சென்று பிச்சை எடுத்து பிழைத்துக் கொள் மகனே' என்று மிகுந்த கவலையோடு அம்மா சொல்ல பசியினால் துடித்தவன் தனது சின்னத் தங்கையை அழைத்துக் கொண்டு இருவரும் பிச்சை எடுப்பதற்காக நடக்கத் தொடங்கினர்.

வீட்டில் அம்மாவோடு செல்லமாக இருந்த சிறிய தங்கை அண்ணாவின் கரத்தைப் பிடித்துக் கொண்டு தொன... தொன... என்று கதைத்த வண்ணம் ஓட்டமும் நடையுமாய் நடந்தாள். நடக்கும் பொழுது 'அண்ணா யாராவது எங்களுக்கு சாப்பாடு தருவார்களா?' என்றாள். அண்ணாவின் கண்களிலிருந்து கண்ணீர் ஓட ஆரம்பித்தது. தங்கையை தன் கரங்களினால் அணைத்துக் கொண்டு வீதியில் சென்றவர்களிடத்தில் அமைதியாய் தன் தலையை அசைத்துக் கரத்தை நீட்டினான். அவனோடு சேர்ந்து தங்கையும் 'அம்மா... வயிறு பசிக்கிறது, சாப்பிட ஏதாவது கொடுங்க அம்மா' என்று கேட்டாள். யாரிடத்தில் பிச்சை கேட்டார்களோ சிலர் பிச்சை கேட்ட கரங்களைத் தட்டி விட்டனர். சிலர் தெரியாத மாதிரியே சென்றுவிட்டனர்.

யாருக்குமே இரக்கம் இல்லாமல் இருக்கிறதே என்று பேசிக் கொண்டு ஒரு மரத்தடியில் சற்று நேரம் இளைப்பாறினார்கள். பின் மீண்டும் நடக்கத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினார்கள். வழியில் ஒரு தேனீர் கடையைக் கண்டு அங்கு சென்றார்கள். கடையில் நின்றவர்கள் இவர்களைக் கலைத்துவிட்டார்கள். இவர்கள் கடைக்குப் பின்பக்கமாக ஓடினார்கள். அங்கு ஒருவர் வடை சுட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். ஆனால் வடை சுடுபவர் இவர்களைக் காணவில்லை. ஏதோ ஒன்றை எடுப்பதற்காக சற்று அப்புறம் சென்றார். 'ஆளைக் காணவில்லை, விரைவாக வடையை எடுத்துக் கொண்டு ஒடுவோம்' என்று சொல்லிக் கொண்டு வடையில் கை வைத்தார்கள். அவ்வளவு தான் வடை சுடுபவர் வந்துவிட்டார்.

அண்ணாவையும் தங்கையையும் கண்டான். அவர்கள் பயந்து ஓடினார்கள். ஆனால் அவனோ மிகுந்த கோபத்துன் பாய்ந்து அவர்களைப் பிடித்து கையில் இருந்த வடைகளைப் பறித்தெடுத்தான். இருவரும் மிகவும் பயந்து அழுதார்கள். எங்களை விட்டுவிடுங்கையா என்று இரங்கிக்கேட்டார்கள். ஆனால் இரக்கம் இல்லாத அவனோ இரண்டு பிள்ளைகளுடைய கரங்களையும் கொதிக்கும் எண்ணையில் அழ்த்தி எடுத்துக் கலைத்துவிட்டான்.

இருவரும் வேதனை தாங்க முடியாமல் கதறி அழுது கொண்டே வீதிக்கு வந்தார்கள். வீதியில் இரக்கம் நிறைந்த ஒருவர் பிள்ளைகளின் நிலை கண்டு அவர்களை விசாரித்தார். தங்கள் வாழ்க்கை நிலையை விபரித்தார்கள். இரக்கம் உடைய அவர் பிள்ளைகளின் காயத்திற்கு எண்ணெய் போட்டு, தன்னிடம் இருந்த ஆகாரத்தை சாப்பிடக் கொடுத்தார். பின் பிள்ளைகள் பராமரிக்கப்படும்படியாக அவர்களை ஒரு சிறுவர் இல்லத்தில் ஒப்படைத்தார்.

இயேசப்பாவின் அன்பான செல்லப் பிள்ளைகளே உங்களுக்கு என்ன தேவை என்றாலும் இயேசப்பாவிடமே கேட்க வேண்டும். பிழையான வழியில் நடக்கக்கூடாது. அந்த வழி பிசாசிற்குரிய வழி. அதிலே அவன் தான் இருப்பான். உங்களை வெட்கப்படுத்தி, துக்கப்படுத்தி, காயப்படுத்துவான். ஆகவே நீங்கள் அவனுக்கு எதிர்த்து நின்று இயேசப்பாவோடு இருக்க வேண்டும்.



சின்னக் கைகள் பத்திரம் பத்திரம்

செய்குவீரே நல்லவை மாத்திரம்

வானத்தில் நம் மீட்பர் தாம்

அன்பாய் நம்மைக் காண்பாராம்

சின்னக் கைகள் பத்திரம் பத்திரம்



**யாத்திராகமம் 20:15 களவு செய்யாதிருப்பாயாக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 01 | | | | | |
| 04 | | 03 | | | | | 02 | |
| | | 05 | | | | | | |
| | | | | | | | 06 | |
| | | | | | | | 07 | |
| | | | 08 | | | | | |
| | 09 | | | | | 10 | | |
| 11 | | | | | | | | |
| | | | | | | | 12 | 13 |

## இடமிருந்து வலமாக — குறுக்கெழுத்துப் போட்டி 112

01. நீதிமான்கள் நன்றாயிருந்தால் பட்டணம் களிகூரும்; துன்மார்க்கர் அழிந்தால் ........................ உண்டாகும்.
04. எருசலேமில் ஆலயத்தின் அஸ்திபாரத்தைப் போட்டவன்
05. மனுஷனுடைய ........................ அவன் கோபத்தை அடக்கும்
08. யெசுவின் அப்பா
09. பன்னிரண்டு அப்போஸ்தலரில் ஒருவன்
11. எஸ்தரின் தகப்பனும் தாயும் மரணமடைந்த போது அவளைத் தன் குமாரத்தியாக எடுத்தவன்

### வலமிருந்து இடமாக

01. 'நான் அந்நிய தேசத்தில் பரதேசியானேன்' என தன் குமாரனுக்கு இவ்வாறு பெயரிட்டார்
06. 'மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல மலைகளில் இஸ்ரவேலர் சிதறடிக்கப்பட்டதைக் கண்டேன்' எனக் கூறியவன்
07. 'பொவனெர்கேஸ்' என பெயரிடப்பட்ட செபதேயுவின் குமாரன்
13. ........................ நாவு ஜீவ விருட்சம்

### மேலிருந்து கீழாக

02. ஆனானியின் வார்த்தைகளைக் கேட்ட போது அழுது துக்கித்தவன்
03. நீதி உத்தம மார்க்கத்தானைத் தற்காக்கும்; துன்மார்க்கமோ ........................ கவிழ்த்துப்போடும்
04. யாக்கோபின் குமாரர்களில் ஒருவன்
10. சவுல் உயிரோடு பிடித்த ராஜா

### கீழிருந்து மேலாக


09. 'நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக' எனக் கூறியவன்
12. பேதுரு வாசலுக்கு முன்னே நிற்கிறார் என இவள் அறிவித்தாள்
13. அசரியாவுக்கு அஸ்பேனாஸ் இட்ட மறுபெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் வை.தேவதாஸ்




அருமையானவர்களே! எங்களது ஆவிக்குரிய வாழ்க்கையிலும் சரி; மாம்சீக வாழ்விலும் சரி ஒவ்வொரு கணப்பொழுதும் ஏதோவொரு முடிவை அல்லது தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலையில் நாம் காணப்படுகிறோம். அந்தக் கணப்பொழுதில் நாம் எடுக்கும் முடிவானது எமது வாழ்க்கையின் திசையையே மாற்றிவிடுகின்றது.

சிந்தித்துப்பாருங்கள். இன்று அனேகருடைய கல்வி தடைபட்டிருப்பதற்கு காரணம் என்ன? நல்ல பல தொழில் வாய்ப்புகளை இழந்து நிற்பதன் பொருள் என்ன? அழகிய குடும்ப வாழ்வு சிதைந்து சின்னாபின்னமாகி இருப்பதன் அர்த்தம் என்ன? அருமையான ஆவிக்குரிய சபைகளிலும் உடைவுகள் வருவதற்கு காரணம் என்ன? அந்தந்த குறிப்பிட்ட நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவின் பின் விளைவுகள் தான் இவைகள்.

எனது பாடசாலை நாட்களில் நடந்த ஓர் சம்பவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். குறிப்பிட்ட நாளில் ஆங்கில பாட ஆசிரியர் பாடம் நடாத்திக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் நான் வகுப்பறையின் கடைசிப் பகுதியில் இருந்த மாணவர்களுடன் இருந்தேன். ஏனெனில் பாடத்தில் ஆர்வமின்மையே இதற்கு காரணம். அந்த நேரத்தில் எனக்கு அருகில் இருந்த மாணவனுடன் தர்க்கமுண்டாகி அது சண்டையாக மாறியது. அந்த வேளையில் வகுப்பறையில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு மின்சார வயறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுத்து சக மாணவனை கடுமையாகத் தாக்கிவிட்டேன். அப்பொழுது ஆசிரியர் என்னை அனைத்து மாணவர்களுக்கும் முன்பாக அழைத்து அடித்து, கண்டித்துவிட்டு கூறிய காரியம் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அதாவது 'நீ ஒரு கொலைகாரனாகத் தான் வருவாய்'. உண்மையில் அந்த வார்த்தைகள் என்னை வெகுவாகப் பாதித்துவிட்டது. படிப்பையே நிறுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் உருவானது. ஆனாலும் அந்த வேளையில் நான் எடுத்த நல்ல முடிவு எனது படிப்பை அந்தளவில் நிறுத்தாமல் தொடர்ந்து செல்ல உதவியது. உண்மையில் அதற்குப் பின்பு எனது கற்கும் ஆர்வத்தில் முன்னேற்றத்தை நான் கண்டு கொண்டேன்.

பிரியமானவர்களே, வேதம் சொல்கின்றது; **வெளிப்படுத்தல் 3:20 இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.** ஆண்டவர் இயேசுவிற்கு கதவைத் திறக்க வேண்டும் என நீ நல்ல தீர்மானத்தை எடுத்து அவருக்கு உன் கதவைத் திறக்கும் போது அவர் உன்னோடு ஐக்கியப்படுகின்ற தேவனாய் இருக்கிறார்.

மாறாக நான் இடம் கொடுக்கமாட்டேன் என நீ ஓர் தீர்மானத்தை எடுத்து உன் கதவை அவருக்கு அடைப்பாயானால் உன் தீர்மானத்தை மீறி ஆண்டவர் செயற்படமாட்டார். எனவே **உனது வாழ்வில் நல்ல முடிவு எடுப்பதும்; அல்லது கெட்ட முடிவு எடுப்பதும் எனது கரத்திலேயே உள்ளது.**

**உபாகமம் 30:19-20 (19.) நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு, 20. கர்த்தர் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்திலே குடியிருக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பற்றிக் கொள்வாயாக; அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர் என்றான்.**

ஆண்டவர் இங்கு என்ன சொல்கின்றார்: உனக்கு முன்பதாக ஜீவனை மாத்திரமல்ல மரணத்தையும் வைத்துள்ளேன். எதை நீ தெரிவு செய்யப் போகின்றாய்? ஆசீர்வாதம் மட்டுமல்ல சாபமும் உன் முன் உள்ளது. எது உனக்கு வேண்டும்?

பிரியமானவர்களே தெரிந்து கொள்கின்ற, முடிவெடுக்கின்ற, தீர்மானிக்கின்ற உரிமையை கர்த்தர் உனக்குத்தான் தந்திருக்கிறார். தேவனுடைய கிருபையினாலே நல்ல பாதையை நாங்கள் தெரிந்து கொள்கின்ற போது, ஆண்டவருடைய வசனத்திற்கு என்று வாழும்படி எங்களை ஒப்புக்கொடுக்கின்ற போது ஆண்டவர் எப்பொழுதும் எங்களுக்குத் துணையாக இருப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எரேமியா 6:16 வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.**

இளைப்பாறுதல் வேண்டுமா? அல்லது அலைச்சல் வேண்டுமா? மகனே! மகளே! எண்ணிப்பார். இப் புத்தகத்தை வாசிக்கின்ற நீ இன்று பலவித அலைச்சல்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறாய். நின்மதி இல்லாமல், நின்று இளைப்பாற இடமில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா? இன்று தேவன் உன் சூழ்நிலையை மாற்ற வல்லவராய் இருக்கிறார். கலங்காதே! உன் தவறான தீர்மானங்களுக்காக அவரிடம் மன்னிப்புக்கேட்டு இனி அவர் உனக்கு காண்பிக்கும் வழியில் நட. அவர் உன் நிழலாய் உன்னைப் பின்தொடருவார்.

வேதாகம கதாபாத்திரங்கள் தங்கள் வாழ்க்கையின் மிக முக்கியமான தருணங்களில் எடுத்த முடிவுகளின் அல்லது தீர்மானங்களின் பின்விளைவுகளை இனிவரும் பகுதிகளில் தியானிப்போம்.

## 01. ஆதாம் ஏவாளின் முடிவு

**ஆதியாகமம் 2:16-17 (16.) தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். 17. ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.**

ஏன் ஒரு குறிப்பிட்ட கனியை மட்டும் உண்ணவேண்டாம் என்று தேவன் கூறினார். பிரியமானவர்களே, **அவ்வாறு அக் கனியை அவன் உண்பது நல்லதல்ல என்று கருதியே தேவன் அதனைச் செய்யச் சொன்னார்.** மகனே, மகளே உன்னை அநாதியாய் நேசிக்கும் அன்பின் பரம தகப்பன் உனக்குத் தர மறுப்பதெல்லாம் உனது நன்மைக்காகவே என்பதை உணர்ந்து வாழவேண்டும் என்பதற்காகவே தேவன் இப்படியான எச்சரிப்புக்களை கொடுக்கிறார்.

சிந்தித்துப்பார்! எத்தனை நாட்களாய் உபவாசம் செய்து ஜெபிக்கிறேனே தேவன் ஏன் எனக்கு இன்னும் காரியத்தை வாய்க்கச் செய்யவில்லை என்று ஏக்கப்பெருமூச்சோடு இருப்பதை உன் தேவன் அறிவார்.

**ரோமர் 8:32 தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக் காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?**

அருமையானவர்களே தன்னுடைய சொந்த மகனையே நமக்காக பூமிக்கு அனுப்பி சிலுவைப்பாடுகளை அனுமதித்து நமக்காகவே ஒப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தவர் இன்றும் உனக்குத் தேவையானதை தரமாட்டாரோ; நிச்சயம் தருவார். **இருப்பினும் சிலதை தேவன் தடை செய்யும் போது சோர்ந்து போகாதே. அது உனது நன்மைக்காகவே தடை பண்ணப்பட்டிருக்கிறது.**

ஒருவேளை இதனை வாசிக்கும் நீங்கள் ஓர் கர்த்தருடைய ஊழியக்காரராய் இருப்பீர்களானால் ஊழியத்தின் நிமித்தம் பல இடங்களுக்குச் செல்வதற்கும், தேவனுக்காக பல காரியங்களை செய்வதற்கும் வாஞ்சித்துக் கொண்டிருந்தும் அது நிறைவேறாதபடியினால் சோர்ந்து போயிருக்கலாம். தேவ பணியாளரே! தேவன் அதனை உமது நன்மைக்காகவே தடைபண்ணியிருக்கிறார்.

**அப்போஸ்தலர் 16:6 அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு,**

தன் பிள்ளைகளை ஊழியத்திற்கு அனுப்பி அவர்களை பயன்படுத்துகின்ற பரிசுத்த ஆவியானவர் சில வேளைகளில் சில இடங்களுக்குச் செல்லாதபடிக்கு நம்மைத் தடைபண்ணுவதும் உண்டு. ஆகையினால் **நமது வாழ்வில் ஆவியானவர் சொல்கிறதை செய்வதற்கு மட்டுமன்றி அவர் தடை செய்கிறதைச் செய்யாதிருக்கவும் கவனமாக இருக்க வேண்டும்.** ஏனெனில் 'நாளை' என்பது அவருக்கு மட்டுமே தெரியும்.

இப்பொழுதும் ஏதோ ஒரு ஊழிய அழைப்பிற்காக நீ காத்துக் கொண்டிருக்கிறாயா? தேவ மனிதனே தேவன் தடை பண்ணுவதை ஒரு போதும் வாஞ்சிக்காதிருப்பீராக.

ஆதாமை நேசித்த தேவன் குறிப்பிட்ட கனியைப் புசிக்காதபடிக்கு விலக்கினார். இருப்பினும் சாத்தானின் வஞ்சகப் பேச்சுக்குள் அகப்பட்ட ஆதாமும் ஏவாளும் தங்கள் வாழ்க்கையில் மிகத் தவறான தீர்மானத்தை எடுத்தார்கள்.

**ஆதியாகமம் 3:6 அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப் படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.**

கவனியுங்கள்! ஏவாள் தன் கணவனிடம் எந்த ஆலோசனையும் கேட்காமல் அல்லது தேவன் வரும் வரை பொறுமையாகக் காத்திருந்து அவரிடம் எதனையும் குறித்து விசாரித்து அறியாமல் ஆசையினால் தூண்டப்பட்டு அவசர முடிவை எடுத்தாள்.

ஏவாள் தனக்கு விலக்கப்பட்ட ஒரே ஒரு மரத்தின் கனியை மிகவும் விரும்புவதற்குப் பதிலாக தேவன் தனக்கு அளித்துள்ள அனேக மரங்களின் கனிகளை உண்டு திருப்தியடைந்திருக்கலாம். இன்றும் பிரியமானவர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் உங்களுக்கு கிடைக்காத காரியங்களைக் குறித்து ஏங்கிக் கொண்டிருக்கிறீர்களா? எனக்கு வெளி நாட்டு பிரயாண அனுமதி கிடைக்காதா? வெளிநாட்டு சம்பந்தம் கிடைக்காதா? என்று ஏங்கிக் கொண்டிருக்கிறீர்களா?

அல்லது ஒருவேளை ஏன் தேவன் எனக்கு இந்த வேலையை தடைபண்ணினார்? ஏன் எனக்கு அது கிடைக்கவில்லை என்று குறை கூறிக் கொண்டு இருக்கின்றீர்களோ?

கொதிக்கும் நீராவியினால் பாத்திரத்தின் மூடி மேலும் கீழுமாக அடிப்பது போல் உனது உள்ளமும் குமுறிக் கொண்டிருக்கின்றதோ? கலங்காதே!

கிடைக்காத வாழ்க்கையை நினைத்து கலங்குவதைவிட தேவன் உனக்குத் தந்துள்ள எண்ணிறைந்த நன்மைகளை நினைத்து அவருக்கு நன்றி சொல்லுங்கள்.

இப்படித்தான் ஆகார் என்ற பெண்ணும் தன் வாழ்க்கையில் எல்லாமே முடிந்துவிட்டது எனக் கதறிக் கொண்டிருந்தாள். **ஆதியாகமம் 21:15 துருத்தியிலிருந்த தண்ணீர் செலவழிந்தபின்பு, அவள் பிள்ளையை ஒரு செடியின்கீழே விட்டு,** தன்னிடமிருந்த தண்ணீர் முடிந்த போது எல்லாமே முடிந்துவிட்டதாக ஆகார் நினைத்தாள்.

அவள் என்ன யோசித்தாள்? **ஆதியாகமம் 21:16 பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேன் என்று, எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள்.** ஆகார் அழுததைப் போல் நீயும் எல்லாம் முடிந்துவிட்டது. இனி ஒன்றுமே செய்ய முடியாது. தலைக்கு மேல் வெள்ளம் வந்த பின்பு முழம் என்ன? சாண் என்ன? என்பதைப் போல் புலம்பிக் கொண்டிருக்கிறாயா? இல்லவே இல்லை. தேவனது அற்புத செயல்கள் குறையவே இல்லை. **ஆதியாகமம் 21:19 தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார். அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த் துரவைக் கண்டு, போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள்.**

அவளுக்கு அருகிலேயே தேவன் ஆசீர்வாதத்தை வைத்திருந்தார். ஆனாலும் அவள் தன் துருத்தியைப் பார்த்து அதில் ஒன்றும் இல்லாதபடியினால் குழப்பம் அடைந்தாள். **இன்றும் அருமையானவர்களே எந்த வாழ்க்கைத் துணையில் ஒரு சுகமுமே இல்லை என நினைக்கின்றீர்களோ அதையே தேவன் உங்களுக்கு ஆசீர்வதிக்கப்போகின்றார்.** எனவே இதனை வாசிக்கும் போதே ஒரு நிமிடம் உன் கண்களை மூடி 'ஆமென் கர்த்தாவே உமக்கு நன்றி' என்று சொல்வாயா?

*ஓர் பிச்சைக்காரன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தரித்திருந்து தினமும் பிச்சை எடுத்து தன் வாழ்க்கையை மிகச் சிரமத்தோடு நடத்திக் கொண்டிருந்தானாம். சில காலங்களின் பிற்பாடு சரியான*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிப்பு இல்லாத அவன் வியாதிப்பட்டு அவ் இடத்திலேயே மரித்தானாம். அப்பொழுது அவனது சடலத்தை அடக்கம் பண்ண முயற்சித்த ஒரு சிலர் அவன் இருந்து மரித்த இடத்திற்கு அருகிலேயே குழி தோண்டி அவனைப் புதைக்கும்படியாக கொஞ்சம் ஆழமாகத் தோண்டிய போது அந்த நிலத்தின் அடியில் பெரிய புதையல் காணப்பட்டதாம். அவன் இருந்த இடத்திலேயே புதையல் இருந்த போதும் அதை அறியாதவனாய் பட்டினியால் மடிந்து போனான் என்று ஒரு கதையுண்டு.

இதனைப் போலவே எந்தவொரு பெற்றோரை நீ வெறுக்கின்றாயோ அவர்களே உனக்கு ஆசீர்வாதம் என்பதை மறக்காதே. உனது பிள்ளை ஒரு கெட்ட குமாரனைப் போல் யாராலும் திருத்த முடியாத நிலையில் இருக்கின்றானே என்று குழம்பிப் போயுள்ளாயா? பயப்படாதே! அப் பிள்ளையின் மூலமே கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார். அல்லேலூயா!

முதலாவது தவறான முடிவை ஏவாள் எடுத்தாள். மனைவியின் விருப்பம் தவறாக இருந்த போதும் அதனை மனமுவந்து ஏற்றுக்கொண்ட ஆதாம் அவரும் பிழையான முடிவை எடுப்பதைப் பார்க்கிறோம். தன் மனைவி தேவனைவிட்டு தூரம் சென்றுவிட்டாள் என்று கண்ட ஆதாம் தேவனைவிட தன் மனைவியை அதிகமாக நேசித்த படியால் தவறான தீர்மானம் எடுத்து பாவம் செய்தார்.

பிரியமான சகோதரனே! நீ தேவனால் அழைக்கப்பட்டு பிரித்தெடுக்கப் பட்டதை அறிந்தும் உனது காதலிக்காக, அவளின் நேசத்திற்காக தேவனைவிட்டு தூரம் போனாலும் பரவாயில்லை; அவள் எனக்கு கிடைப்பதற்காக எதையும் செய்வேன் என உன் வாழ்வில் தீர்மானம் எடுக்காதே.

இன்றும் எத்தனையோ தற்கொலைகளை நாம் காண்கிறோம். அதன் காரணம் என்ன? தேவனைவிட உலகத்தை அதிகமாக நேசிப்பதே ஆகும். எந்த உறவுக்காகவும் உனக்காக சிலுவையில் தொங்கிய இயேசுவை விட்டுவிடாதே.

இதனை எழுதிக் கொண்டிருக்கும் போது ஓர் சம்பவத்தை கேள்விப்பட்டேன். அதாவது ஒரு பெண் தன் வீட்டிலே பூங்கன்று செடிகளுக்குள்ளே கஞ்சா செடியையும் கவனமாக பராமரித்து வளர்த்தாளாம். அது பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட போது தான் தெரிந்தது. அது விற்பனைக்காக அல்ல மாறாக கஞ்சாவிற்கு அடிமையாகிப் போன தனது கணவனுக்காக அதை வளர்த்திருக்கிறாள்.

**இன்று இதனைப் போலவே கணவனுக்காக மனைவியும், மனைவிக்காக கணவனும் பல பிழையான தீர்மானங்களை எடுக்கிறார்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவாளுடைய பிழையான முடிவு ஆதாமை பாதித்தது. ஆதாம் ஏவாளின் பிழையான முடிவு அவர்களின் மூத்த மகனைப் பாதித்தது. **ஆதியாகமம் 4:8 காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான். அவர்கள் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்.**

இதனை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு சகோதர சகோதரியே இன்று உன் வாழ்வில் தொற்று வியாதியைப் போல் பிரச்சினைகள் உன் குடும்பத்திற்குள்ளேயே சுற்றிக் கொண்டிருப்பதற்கு காரணம் என்ன?

எங்கேயோ நீங்கள் எடுத்த ஓர் தவறான தீர்மானம் ஆகும். அதனை நீ சரி செய்யும் போது; **சங்கீதம் 122:7 உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக.** என்ற வாக்குத்தத்த வசனத்தின்படி உன்னை தேவன் நிச்சயம் ஆசீர்வதிப்பார். கவலைப்படாதே!

தொடரும்...

# வினா விடை - 114

01. 'கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்' என்று சொன்னவர் யார்?
02. 'நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள்' என்று சொன்னவர் யார்?
03. காட்டுமிருகங்களின் நடுவில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவர் யார்?
04. ஆசீர்வாதம் கேட்ட பக்தன் யார்?
05. பழைய ஏற்பாட்டில் முதல் கேள்வி எது?
06. 'என் தேவனே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்' என்று சொன்னவன் யார்?
07. ஒரு ராஜாவைத் தேடி மந்திரிமாரும் பிரதானிகளும் போனார்கள். அந்த ராஜா யார்?
08. 'மண்ணுயிரைக் காப்பவரே, பாவஞ்செய்தேனானால் உமக்கு நான் செய்ய வேண்டியது என்ன?' என்று கேட்டவன் யார்?
09. எருசலேமில் நூறு நாள் ராஜாவாயிருந்த ராஜா யார்?
10. புதிய ஏற்பாட்டில் கடைசி கேள்வி எது?



சரியான விடை எழுதியவர்களில் பாராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:

வினாவிடை - 113
சி.சுமித்திரா
(பாண்டவெட்டை)

குறுக்கெழுத்துப் போட்டி - 111
உ.கிறேசின்
(காரைநகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது

❒ திருமதி. J.பிலிப்




இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். 'உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்' என்று வாக்கு கொடுத்த தேவன் இவ் ஆண்டின் ஆரம்ப நாட்களில் விபத்துக்கள் சிலருடைய வாழ்க்கை யில் ஏற்பட்டது. ஆனால் உயிர் சேதங்கள் ஏற்படாமல் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத் தின்படி தேவ பிள்ளைகளை காத்தார். அவருக்கே துதி, கனம், மகிமை உண்டாவதாக.

அந்த நம்பிக்கை நம்மை வெட்கப் படுத்தாது. **ரோமர் 5:5b அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.** யார் மேல் நம்பிக்கை? எதன்மேல் நம்பிக்கை? சகோதரியே கடந்த ஆண்டு உன்னை வெட்கப்படுத்தக்கூடிய காரியங்கள் நடந்திருக்கலாம். உதாரணம் உன் குடும்ப பிரச்சினை தீர்க்க முடியாமல் இருக்க லாம், உன் பிள்ளைகளின் எதிர்காலத்தில் நடக்க வேண்டிய காரியங்கள் நடக்காதபடியால் நீ வெட்கப்பட்டுபோயிருக்கலாம். உதாரணம்; பிள்ளைகளின் திருமணங்கள், வேலை வாய்ப்புக்கள், படிப்பு போன்ற காரியங்கள் நீ எதிர்பார்த்தபடி நடக்காமல் போயிருக்கலாம்.

அதனால் நீ வெட்கப்பட்டு இருக்கிறாயா? உனக்கு ஒரு நல்ல செய்தி. அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. யார் மேல் நம்பிக்கை? உன்னை தேடி வந்த இயேசுவின் மேல் நம்பிக்கையாய் இருக்கி றாயா? தேவனுடைய எழுதப் பட்ட வேத வார்த்தைமேல் நம்பிக்கை வைத்து அதன்படி நடக்கிறாயா? அப்படியானால் இச் சஞ்சிகையில் உனக்கு ஒரு நல்ல செய்தி உண்டு. ஜெபத்துடன் வாசிப்பாயா?

இயேசு கிறிஸ்துவினால் சிநேகிக்கப்பட்ட ஒரு குடும்பம் தான் மார்த்தாள், மரியாள், லாசரு. லாசரு வியாதிப்பட்டு இருப்பதை அவனுடைய சகோ தரிகள்; இயேசுவுக்கு நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கிறான் என்று சொல்லி அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள் (யோவான் 11:3). ஆனால் இயேசு அவன் வியாதியாய் இருப்பதை அறிந்தும் தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டு நாள் தங்கினார் (யோவான் 11:6b).

லாசரு மரித்து நான்கு நாட்களுக்கு பின்னர் இயேசு மரியாள், மார்த்தாளை சந்திக்க வருகிறார். அனேகர் மார்த்தாள், மரியாளுக்கு ஆறுதல் சொல்லும்படி வந்திருந்தார்கள். இயேசு வருகிறார் என்றவுடன் மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து; 'ஆண்டவரே நீர் இங்கு இருந்திருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்க மாட்டான். அதே போல் மரியாளும் இயேசுவைக் கண்டவுடன் நீர் இங்கே இருந்திருந்தீரானால் சகோதரன் மரித்திருக்கமாட்டான் என்றாள்.

மார்த்தாள், மரியாளுக்கு ஆறுதல் கூற வந்தவர்கள் இப்போது இயேசுவின் மேல் குறை கூறுவதற்கு ஆரம்பித்துவிட்டார்கள். **யோவான் 11:37 குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள்.** இயேசு என்ன செய்தார்; கல்லறையினிடத்தில் வந்து கல்லைப் புரட்டும்படி கட்டளையிட்டார். பின்பு லாசருவே வெளியே வா என்றார். மரித்தவன் வெளியே வந்தான். இயேசு செய்தவைகளை கண்ட அனேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். உன்னுடைய வாழ்க்கையில் இருக்கும் தடைகளைப் புரட்ட நீ ஆயத்தமா? மார்த்தாள், மரியாள் போல இயேசுவின் மேல் உன் அன்பு, விசுவாசத்தில் உறுதியாய் இருக்கின்றாயா? அல்லது மார்த்தாள், மரியாளுக்கு ஆறுதல் சொல்ல வந்தவர்கள் இயேசுவின் மேல் குற்றம் சாட்டி, குறை கூறிய கூட்டத்தில் அமர்ந்திருக்கிறாயா?

மார்த்தாள், மரியாள், லாசரு ஆகியோர் இயேசுவை நேசித்தார்கள். அதே போல் இயேசுவும் அவர்களை நேசித்தார். அதனால் தான் லாசரு மரித்துவிட்டான் என்றவுடன் மரியாள், மார்த்தாள் மற்றும் அவர்களோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதை இயேசு கண்டபோது அவரும் 'கண்ணீர் விட்டார்' (யோவான் 11:35). அதே போல் நீயும் இயேசு மேல் நம்பிக்கை வைப்பாயானால் அந்த நம்பிக்கை உன்னை வெட்கப்படுத்தாது.

**நாகூம் 1:7b தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்.**



## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

'செத்துப் பிழைத்தவன் நான் என்றான் ஒருவன், நானும் தான் என்றான் அடுத்தவன். நான் மட்டும் என்ன என்றாள் ஒருவள், உடன் சேர்ந்தாள் மற்றொருவள். நான் பாதிவழி போனவனாச்சே என்றான் அடுத்தவன்' இந்த ஐவரும் யார் யாரோ?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# புனித இக்னேஷியஸ்
## 50 - 107

### கிறிஸ்துவில் எழுந்து நில்

ஆதி கால கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்காக பக்தி வைராக்கியத்துடன் நின்ற விதங்கள் நம்மை மெய் சிலிர்க்கச் செய்கின்றன.

பெருவெள்ளத்து இரைச்சலைப் போன்ற போராட்டங்கள் நம் வாழ்வில் மோதும் போது இம்மாபெரும் தியாகிகளின் தியாகங்கள் நம்மை தலை நிமிரச் செய்கின்றன. இவர்கள் போராட்டங்களை வேரிலேயே ஆட்டம் காணச் செய்தவர்கள். டிராஜன் என்ற அரசன் கிறிஸ்தவர்களை மிகவும் துன்புறுத்திக் கொண்டிருந்தான். கி.பி 107ஆம் ஆண்டு அந்தியோகியாவில் பிரவேசித்தான். அவன் தன் முதல் வேலையாக கிறிஸ்தவர்களின் பாதுகாவலனாக விளங்கிய இக்னேஷியஸைத் தேடினான். அரசன் முன் கொண்டுவரப்பட்ட இக்னேஷியஸ் பல கேள்விக் கணைகளால் துளைக்கப்பட்டார். முடிவில் விசுவாச வீரன் இக்னேஷியஸ் வெற்றி பெறவே அரசன் பொங்கி எழுந்தான். இக்னேஷியஸை சிறைபிடிக்க ஆணையிட்டான்.

புலி பயந்தால் ஓடும். ஆனால் கிறிஸ்துவின் வீரர்கள் புறமுதுகு காட்டி ஓடுபவர்கள் அல்ல. வாழ்வானாலும் சாவானாலும் அது கிறிஸ்துவுக்குள் என்பதில் உறுதியானார் இக்னேஷியஸ். அந்தியோகியாவைவிட்டு ரோம் நகருக்கு அழைத்து வரப்பட்டார். தான் வந்த வழிகளிலெல்லாம் மக்களை கிறிஸ்துவில் பெலப்பட தைரியப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராயர் போலிகார்ப்பையும் சந்தித்தார். கிறிஸ்துவின் அன்பினால் இருவரும் ஒருவரையொருவர் தேற்றிக் கொண்டனர். பல கடிதங்களை இக்னேஷியஸ் திருச்சபைகளுக்கு எழுதி அனுப்பினார்.

கி.பி 107ஆம் ஆண்டு ஜனவரி 20இல் ரோமாபுரிக்கு கொண்டு வரப்பட்ட இக்னேஷியஸ் மீண்டும் எச்சரிக்கப்பட்டார். விசுவாச வீரன் கிறிஸ்துவில் நிலைத்து நின்றதால் சிங்கங்களின் கூண்டுக்குள் போடப்பட்டார். அவர் உடல் அழிந்தது. ஆனால் உயிர் இறைவனில் இணைந்தது. புத்துயிர் பெற்றது.

**அன்பரே! கிறிஸ்துவுக்காக எழுந்து நிற்க உங்களை ஆயத்தப்படுத்திவிட்டீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: வெற்றிகரமான உலக சுவிசேஷ ஊழியத்திற்கு நமது குணாதிசயமே திறவுகோல் — ஷர்வுட் எட்டி**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 24**

---

# சாமுவேல் சுவேமர்
## 1867 - 1952



## அறிந்ததைக் கூறுங்கள்

இஸ்லாமியர்களின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட சாமுவேல் சுவேமர் 1867ஆம் ஆண்டு பிறந்தார். கிறிஸ்தவ முறைப்படி வளர்ந்த இவர் சிறுவயதிலேயே மிஷனெரி தாகம் உடையவராக காணப்பட்டார். இவரது சகோதரி நெல்லி சுவேமேர் என்பவர் 40 வருடங்கள் சீனா தேசத்தில் மிஷனெரியாக பணி செய்தவர்.

கல்லூரியில் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்த போது ராபர்ட் வில்டர் என்ற மிஷனெரியின் சவாலான செய்தியினால் தொடப்பட்டார். தன்னை ஆண்டவர் மிஷனெரிப் பணக்காக அழைப்பதை உணர்ந்தார். எனவே அரேபிய உலகிற்கு செல்ல தீர்மானம் செய்தார். ஆனால் இவரை பொருளதவி செய்து தாங்கவும், உற்சாகப்படுத்தவும் எவரும் முன்வரவில்லை.

சுவேமர் தன் நண்பர் ஜேம்ஸ் கேண்டினுடன் இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தார். இருவரும் ஒரே தரிசனம் உடையவர்களாய் ஒற்றுமையாக செயற்பட ஆரம்பித்தனர். 'அரேபியன் மிஷன்' என்ற இயக்கத்தை ஆரம்பித்து, அதற்கான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகளை பலரிடமிருந்தும் கேட்டுப் பெற்றுக் கொண்டனர். தங்களின் மிஷனெரிப் பயணத்திற்கான உதவிகள் அனைத்தும் கிடைத்தவுடன் 1869இல் இருவரும் அரேபியாவிற்கு மிஷனெரியாக சென்றனர்.

சாமுவேல் சுவேமர் பாரசீக வளைகுடா பகுதியில் தன் பணிகளை ஆரம்பித்தார். தெருக்களில் நின்றும், பொதுக்கூட்டங்கள் கூட்டியும், வீடு வீடாகச் சென்றும் மக்களை கிறிஸ்துவிடம் வழிநடத்தினார்.

ஊழியப்பாதையில் வரும் இன்னல்களோ ஏராளம். 1904ஆம் ஆண்டு ஸ்வேமேர் 4 மற்றும் 7 வயதான தன் இரு சிறு மகள்களையும் மரிக்கக் கொடுத்தார். வேதனையிலும் முன்வைத்த காலை பின் வைக்காமல் உறுதியுடன் பணிபுரிந்தார். 1912ஆம் ஆண்டு அனைத்து இஸ்லாமிய ஊழியங்களை வழிநடத்தும் பொறுப்பை பெற்றார். 17 வருடங்களாக காய்ரோவை மையமாக வைத்து உலகின் பல பாகங்களுக்கும் சென்று இஸ்லாமியர்களை இயேசுவுக்குள் நடத்திய இவர் மகத்தான தேவ மனிதர்.

**அன்பரே! உங்கள் மூலம் எவ்வித மக்கள் கிறிஸ்துவை கண்டுகொள்ள போகிறார்கள்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** கர்த்தருடைய வேலையை செய்யும்போது, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே நமது இலக்காயிருக்க வேண்டும்.

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஏப்ரல் 2**

## வினாவிடை 113 சரியான பதில்கள்

01. தாவீது - 1சாமுவேல் 30:6
02. தாவீது - 11சாமுவேல் 24:14
03. சங்கீதம் 138:3
04. ஓர் அமலேக்கிய வாலிபன் - 11சாமுவேல் 1:1-16
05. மரியாள் - லூக்கா 1:53
06. லாமேக்கு - ஆதியாகமம் 5:28-29
07. ஆதாம் - ஆதியாகமம் 1:27; 5:5, லூக்கா 3:38
08. ஆபகூக் 2:11
09. யூதாஸ் - யோவான் 13:29
10. பாரூக் - எரேமியா 36:18

**அனல் 2023 தை - [illegible] மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

**பொய்**

**(சங்கீதம் 7:14, யோவான் 8:44, நீதி 14:25, எரேமியா 9:3, எபேசியர் 4:25)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




☐ போதகர் வேதநாயகம் மகாராஜா




அப்போஸ்தலர் 19:10-17 (10.) இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள். 11. பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். 12. அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர்மேல்போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப்புறப்பட்டன. 13. அப்பொழுது தேசாந்தரிகளாய்த்திரிகிற மந்திரவாதி களாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத்துணிந்து: பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள். 14. பிரதான ஆசாரினாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழுபேர் இப்படிச் செய்தார்கள். 15. பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி, 16. பொல்லாத ஆவியை யுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற் கொள்ள, அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள். 17. இது எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்தபோது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது.

## குறைவுள்ள (போலி) கிறிஸ்தவமும்; தாக்கமும்

கிறிஸ்தவ வாழ்வு என்பது உண்மையில் அது வேஷம் அல்ல; அது நியாயமானது. கிறிஸ்தவ வாழ்விற்குள் நடிப்பு இருக்காது; கிறிஸ்தவ வாழ்வு தத்துருவமான உண்மையை காண்பிக்கிற ஓட்டம். கிறிஸ்தவ வாழ்வு என்பது நேர்மைக் குள் ஒரு நேர்மையற்றதும், நீதிக்குள்ளே அநீதியும், பொய்க்குள் உண்மை யும்; உண்மைக்குள் பொய்யும் மறைந்திருக்க முடியாத ஒன்று. கிறிஸ்தவம் என்பது கிறிஸ்துவின் இரத்தத்தால் புடமிடப்பட்ட ஒன்று. அப்போஸ்தலனாகிய பவுலும் இந்த அதிகாரத்தில் சிறப்பான செயல்களைச் செய்து, கர்த்தருடைய வார்த்தையை அறிவித்து வந்து, தேவனுடைய வல்ல மைக்கு சாட்சியாக சில காரியங்களைச் செய்து வந்தான். அப்போஸ்தலர் 19ஆம் அதிகாரத்தில் முதல் பகுதிகளில் நீங்கள் பெற்ற ஞானஸ்நானம் எப்படிப் பட்டது என்று கேட்டு, அதன் பின்பு சரியான ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறார். அதற்கு பிற்பாடு அவர்கள் மேல் கைகளை வைக்கின்றார். அப்போது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

அதன் பிற்பாடு தொடர்ந்து இரண்டு வருடங்கள் தேவனுடைய வசனங்களை அவர்களுக்கு பிரசங்கிக்கிறார். அப் பொழுது அற்புதங்கள், அடையாளங் கள் எல்லாம் அந்த இடத்தில் நடை பெற்றது. ஆகவே தேவனுடைய உண்மையான பிள்ளை என்ற சாட்சி யோடு அப்போஸ்தலனாகிய பவுல் செய்த காரியங்கள் இவை. ஆனால் இங்கே என்ன பார்க்கிறோம் என்றால் அப்போஸ்தலர் 19:13 அப்பொழுது தேசாந்தரிகளாய்த்திரிகிற மந்திரவாதி களாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த் தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து: பவுல் பிரசங்கிக்கிற இயேசு வின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள்.

நிறைகுடம் தளம்பாது என்று சொல் வார்கள். கிறிஸ்தவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும் நாங்கள் எல்லோரும் மட்பாண்டங்களாய் இருக்கி றோம். தேவன் தன்னுடைய விலையேறப் பெற்ற பிரசன்னத்தையும், அபிஷேகத் தையும் மட்பாண்டங்களாகிய எமக்குள் வைத்திருக்கிறார். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பிள்ளைகள் மீது அபிஷேகம் வைக்கப்பட்டிருக்கிறது. அதை பெற்றுக் கொள்ளாதவர்கள் தாகத்தோடு கேட் கிற போது அதைப் பெற்றுக் கொள்கி றார்கள். நிறைவானது என்று சொல்லும் போது உலகப் பிரகாரமான ஆசீர்வாதங் கள், பணக்காரராக இருப்பது என்பதைக் குறித்தோ அல்லது நாங்கள் கௌர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வமாக இருப்பதைக் குறித்தோ சொல்லப் படவில்லை. ஆனால் தேவனுடைய நிறைவு என்பது மட்பாண்டங்களாகிய நாங்கள் தேவன் விரும்புகிற பரிசுத்தத் தோடு, தேவ ஆவியிலே நிறைந்த மாயமற்ற ஒரு உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதைத்தான் குறிக்கிறது.

எனவே இந்த நிறைவான கிறிஸ்தவ வாழ்வு ஒவ்வொருவருடைய வாழ்விலும் காணப்பட வேண்டும். அது இல்லாத பட்சத்தில் எங்களுடைய வாழ்வும் சில வேளை போலித்தோற்றத்திற்குரியது போன்று இருக்கும். இங்கே பிசாசு களைத் துரத்த முற்பட்ட இந்த மனிதர்கள் உண்மையில் உள்ளான நிறைவு இல்லாதவர்கள். ஏன் உங்களால் ஜெபிக்க முடியவில்லை, ஜெபிக்கிற போது ஏன் நித்திரைக்கு செல்கி றேன், ஏன் என்னால் வேதத்தை வாசிக்கமுடியவில்லை என்று யோசித் திருக்கிறீர்களா? நான் நிறைய வேண்டும் என்ற மனது பல கிறிஸ்த வர்களுக்கு இல்லை. தேவனாலும் தேவனுடைய வசனத்தினாலும் தேவனு டைய ஆவியினாலும் நிறைய வேண்டும் என்ற வாஞ்சையும் எதிர்பார்ப்பும் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்கிற வர்களிடத்தில் இல்லாமல் போயிற்று. தேவனுடைய நடத்துதலும், வெளிப் பாடும், செயலாற்றுதலும் என்னுடைய வாழ்வில் நடக்க வேண்டும் என்ற ஏக்கம் இந்த நாட்களில் தேவனுடைய பிள்ளைகளிடத்தில் இல்லாமல் போய் விட்டது. ஆகவே இதன் நிமித்தமாக யோசித்துக் கொள்ளுங்கள், ஏன் என் வாழ்வில் உற்சாகம் இல்லாமல் இருக்கி றேன், ஏன் ஜெபிக்க — துதிக்க முடியாமல் இருக்கிறேன், கர்த்தரைப் போற்ற முடியாமல் இருக்கிறேன்? காரணம், எங்களுக்கு இருக்க வேண்டிய தேவனுடைய நிறைவை இழந்துவிட்டோம் அல்லது அதனைப் பெற்றுக் கொள்ளாமல் விட்டுவிட்டோம். தேவனிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய சத்திய முறைகளை எங்களுக் குள் கொண்டிருக்காததால் எங்களுடைய வாழ்வு மங்கிப்போயிருக்கிறது. ஏன் இந்த மட்பாண்டம் தளம்பி இருக்கிறது என்றால் எங்களுக்குள் இருக்க வேண்டிய தேவனுடைய நிறைவு, பொக்கிஷம் பல கிறிஸ்தவர்களுடைய வாழ்விற்குள் அது இல்லாமல் போயிருக்கிறது.

எனவே இப்படியாக வாழ்க்கையை கடைப்பிடிக்கிற மனிதனுக்கு பெரிய இழப்புக்களையும், நஷ்டங்களையும், நிந்தனைகளையும், அவமானங்களை யும், துன்பங்களையும், வேதனை களையும், நோவுகளையும் அது கொண்டு வரும். தேவனை அறிந்து எத்தனையோ வருடங்கள் சென்றும் இன்னும் கிறிஸ் தவன் என்ற போர்வையில் உண்மை யான நிறைவு இல்லாமல் இருந்தால்; உங்களுடைய வாழ்வில் வருகிற துன்பத்திற்கும், இழப்பிற்கும், வேத னைக்கும், அவமானத்திற்கும், நஷ்டத் திற்கும் நிந்தனைகளுக்கும் நீங்களே பொறுப்பு.

அப்போஸ்தலர் 19:15 பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி, உண்மையில் பிசாசு கொம்புகள் வைத்துக்கொண்டு வராது. சிலவேளை அது அழகான தோற்றத்தோடு வரும். பிசாசு தன்னை எவ்வளவுக்கு அழகுபடுத்தி வரமுடியுமோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவு அழகுபடுத்தி வரும். நாம் விரும்பத்தக்க ரூபத்தில் பிசாசு வருவான். வேதம் சொல்கிறது: அவன் ஒளியின் தூதன் என்று. ஆனால் அவன் சகல அந்தகாரத்திற்கும் உரியவன். அவன் வருகிற போது ஒளியின் தூதனைப் போல வருவான். எனவே எங்களுடைய வாழ்க்கையை கண்ணும் கருத்துமாக காத்துக் கொள்ள வேண்டும். **நாம் தேவனால் நிறைந் திருப்போம் என்றால் நாம் அதை இனங்கண்டு கொள்வோம். இங்கு உண்மையாக தேவனுடைய பிள்ளை இல்லாமல், தேவனை விசுவாசிக் காமல், சரியான நிலை இல்லாமல், நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய கிறிஸ்தவத்திற்குரிய குணலட்சணங் கள், சொரூப லட்சணங்கள் இல்லா மல் கிறிஸ்தவத்திற்குரிய கனிகள், பண்புகள் இல்லாமல் இருப்போம் என்றால் நாங்கள் நிறைவற்ற கிறிஸ் தவர்கள்.** ஒரு கட்டத்தில் உண்மை யான கிறிஸ்தவர்களாக இருந்து, சில வேளைகளில் சிலநாள், சிலமாதங்கள், வருடங்கள் போகிற போது இருக்க வேண்டிய கிறிஸ்தவ தன்மையை இழந்துபோய் விடுவோம்.

கிறிஸ்தவ வாழ்வு என்பது ஒரு நாள் நிறைந்து பிற்பாடு இழந்து போகிற வாழ்வு அல்ல; அது நிறைந்த வாழ்வு. நிறைவாக காணப்படுவது தான் கிறிஸ்தவ வாழ்வு. நான் பெற்றுக் கொண்ட அபிஷேகத்தை, இரட்சிப்பின் சந்தோ ஷத்தை படிப்படியாக இழந்தேன் **என்றால் உண்மையில் நான் தகுதி யற்றவன். பிசாசை எதிர்ப்பதற்குரிய** தேவனுடைய நிறைவு எனக்குள் **இல்லையென்றால் அசுத்த ஆவி** பிடிப்பதற்கு இலகுவாய் இருக்கும். சிலவேளை அசுத்த ஆவி பிடித்திருந் தாலும் அது பிடித்திருப்பது தெரியாதபடி கூட பேசமுடியும். ஆனால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் விசுவாசப் பிள்ளைகளாய் தேவனுடைய ஊழியனாய் கற்றுக் கொள்ள வேண்டும். **இன்றைக்கு ஆண்டவரிடம் கேளுங்கள், ஆண்ட வரே உம்மால் நான் நிறைந்திருக்க வேண்டும், நான் கிறிஸ்தவன் என்று சொன்னால் கிறிஸ்தவனாகவே வாழ வேண்டும். அதற்குள் நடிப்பு இருக்கக்கூடாது. ஆண்டவரே நான் கிறிஸ்தவன் என்றால் அதற்குரிய உண்மையான நடைமுறை என் வாழ்வில் காணப்பட வேண்டும் என்று ஆண்டவரிடம் கேளுங்கள்.** இல்லை யென்றால் தாக்கம் வரும்.

*ஒருவர் ஆண்டவருக்காக சிறப்பாக ஊழியம் செய்தார். அவரைப் பற்றி சொல்கிற போது, அவர் அசுத்த ஆவிகளைத் துரத்து வதை நன்றாக செய்வார். அந்த ஊழியர் நன்றாக, சிறப்பாக ஊழியம் செய்து, கடைசியாக அவரைக் குறித்து காரியம் வந்த போது அவர் கிறிஸ்தவ வாழ்க்கை யில் தோற்றுப் போனார். அவர் என்னமாதிரி தோற்றுப் போனார் என்பதை இங்கே எழுதவில்லை. ஆனால் அவர் கிறிஸ்தவ வாழ்க் கையில் தோற்றுப்போய்விட்டார். பிசாசு அவரைத்தான் விரும்பிய படி நடத்தியது. அந்த மனிதரைப் பற்றி ஒருவர் சொன்னார்: அவர் கர்த்தரால் நன்றாய் நடத்தப்பட் டார், அசுத்த ஆவிகள் அவரைக் கண்டால் ஓடும். அவர் அங்கே*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றவுடன் ஜெபிப்பார், உடனே சுகம் கிடைக்கும், பிசாசுகள் ஓடும். அவர் சரியான நிலையில் இருந்த போது அது நடந்தது. ஆனால் அவர் அதைவிட்டு வழிவிலகின போது அவரை பிசாசு மேற்கொண்டுவிட்டது.

ஆவிக்குரிய நிர்வாணி, ஆவிக்குரிய காயம், ஆவிக்குரிய விழுகை. அவர் அப்படியே அதிகமான நிந்தனைக்கு முகம் கொடுத்துவிட்டார்.

## தேவனுக்காய் உங்களை விட்டுக் கொடுங்கள்.

தேவனுடைய சத்தத்திற்கு ஒரு போதும் உங்களுடைய செவியை அடைக்காதிருங்கள், கர்த்தருடைய வார்த்தையின் வெளிச்சத்திற்கு உங்களுடைய கண்களை ஒருபோதும் மூடாதிருங்கள், தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக உங்களுடைய வாழ்வின் முழுப்பகுதியையும் பயன்படுத்துவதற்கு ஒரு போதும் தடைபோடாதிருங்கள். தேவன் என்னிலே வாசம் பண்ண வேண்டும் என்ற ஏக்கம் என்னிலே இருக்கும் என்றால், தேவனுடைய ஆலயமாய் சரீரம் முழுவதுமாய் இருக்க வேண்டும் என்றால் கர்த்தருடைய அபிஷேகத்தினால் நிறைக்கப்படுவது, தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்திற்காய் எங்களை அர்ப்பணிப்பது, தேவனுடைய தூய ஆவியானவரின் தொடுதலுக்காய் எங்களை விட்டுக்கொடுப்பது தேவன் விரும்புகிற நிறைவை பெற்றுக்கொள்வதற்கு எங்களுடைய வாழ்வை கொடுப்பதற்கு ஒரு போதும் தடைபண்ணாதிருங்கள். ஏனென்றால் அதனால் உங்களுக்கு நீங்களே வேதனைகளையும், நிந்தனைகளையும், அவமானங்களையும், தாக்கங்களையும் ஏற்படுத்திக் கொள்ள ஏது உண்டாகும்.

## தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதிருங்கள்

❋ இந்த மனிதர்கள் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கினார்கள். இரட்சிப்பின் அனுபவம், சந்தோஷம் இல்லை. தேவனுக்கு விரோதமாக செயலாற்றுகிறார்கள். பாவத்திலே பிறந்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள் இயேசுவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்த முறப்பட்டார்கள். பத்துக்கட்டளைகளில் ஒன்றாகிய தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக என்ற கட்டளையை மீறினார்கள். சாராய மணம் அடிக்கும் ஆனால் சத்தியமாய், இயேசுவின் நாமத்தில் நான் குடிப்பதில்லை என்று சொல்வார்கள். சத்தியமாய் என்று நாம் சொல்வதே தவறு. சிலர் சொல்வார்கள், நீங்கள் நம்பவில்லை என்றால் நாம் வேதாகமத்தை கடந்து காண்பிக்கிறேன் என்று. சிலருக்கு ஆண்டவருடைய நாமம் அவர்கள் தப்பிக்கிற பொருள். கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குவதற்கு அவர்கள் வாய் கூசாது. தங்களுடைய பாவத்தை மறைப்பதற்குரிய ஒரு மறைவு. பாவத்தை மறைப்பதற்குரிய ஒரு மறைவாக கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்தக்கூடாது. **யாத்திராகமம் 20:7 உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடார். இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துகிறவர்கள் எப்போதும் உண்மையுள்ளவர்களாய், தேவனுடைய நிறைவைப் பெற்றவர்களாய், ஆவியில் நிறைந்தவர்களாய், கிறிஸ்தவ வாழ்வை வாழ்கிறவர்களாய் தேவனுடைய நாமத்தைப் பயன்படுத்த வேண்டும்.

## போலி இரட்சிப்பும்; வேஷமும்

❊ **இந்த மனிதர்கள் இரட்சிக்கப் படாதவர்கள் ஆனால் இரட்சிக்கப்பட்ட வர்கள் போன்று வேஷம் போட்டார் கள். அதனால் அவர்களுக்குப் பாதிப்பு வந்தது.** இவர்கள் கிறிஸ்துவின் பிள்ளைகள் இல்லாமல், கிறிஸ்துவின் பிள்ளைகள் போன்று வேஷம் போட்டார் கள். ஆனால் நடந்தது என்ன தெரியுமா? பிசாசு திரும்ப அவர்களுக்கு அடித்தது. **சிலவேளை பிசாசு சில மனிதருக்கு அடிப்பதால் வெளிக்காயம் காணப் படாது. பல விசுவாசிகள் ஏன் பின் மாற்றம் அடைந்து விழுந்திருப்பார் கள் தெரியுமா? பிசாசு அவர்களை திருப்பி அடித்ததால்தான். திருப்பி அடித்ததால் அவர்களுக்கு இரத்த காயம் வரவில்லை ஆனால் ஆவிக் குரிய வாழ்வு சிதைந்து போய் விட்டது.** பிசாசு திருப்பி அடித்ததால் வெளியரங்கமான அழகில் கீறல் எதுவும் வரவில்லை. ஆனால் அவர்கள் ஆவி துண்டாடப்பட்டுவிட்டது. பிசாசு அடித்தபடியால், மற்றவர்கள் காண்கிற எங்களுடைய சொல், செயல்கள் எல்லாம் சிறப்பாக இருக்கிறது, ஆனால் காணமுடியாத பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டுவிட்டது. எரிச்சல், பொறாமை, வீழ்த்துதல், துரத்துதல், தள்ளிவிடுதல் போன்ற மனநிலை எங்களுடைய ஆவிக்குரிய மனிதன் நொண்டியாக் கப்பட்டிருக்கிறான், முடமாக்கப்பட்டிருக் கிறான். ஆவிக்குரிய மனிதனின் கண்கள் பிடுங்கப்பட்டிருக்கிறது. **ஏன் தெரியுமா? உண்மையான கிறிஸ்த வத்துக்குரிய நிறைவு இல்லாமல் நாங்கள் கிறிஸ்தவர்கள் போன்று போடுகிற வேஷம் தாக்கத்தைக் கொண்டு வருகிறது.**

**கிறிஸ்தவர்கள் என்றால் உண்மை யான கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும். எங்களுடைய வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கை போல நடிப்பு ஒருவேளை யாருக்கும் தெரியாமல் இருக்கலாம்.** இதுவரை தண்டனை பெறாமல் இருக்கலாம். ஆனால் ஒரு நாள் எல்லோரும் காணும்படியாக நித்திய நியாத்தீர்ப்பிலே எல்லாமே வெளிப்படுத்தப்படும். ஆகவே எம்மிடத் தில் உண்மையான கிறிஸ்தவனுக்குரிய அனைத்தும் இருக்க வேண்டும். **அது உங்களுக்கு நிந்தனை, வேதனை, நஷ்டம், இழப்பு போன்றவற்றைக் கொண்டு வந்தாலும் உண்மையான ஆவிக்குரிய கிறிஸ்தவனுக்குரிய அத்தனை தன்மைகளும் எங்களுக் குள் மறுபடியும் நாட்டப்பட வேண்டும்.** *கிறிஸ்தவத்தில் பலருடைய தரா தரம் பலருக்குத் தெரியாது.* ஆனால் அந்தந்த நபருக்கு தங்கள் நிலை தெரியும். **சிலவேளை சில காரியங் களில் விழுந்துபோய் இருப்பார்கள் அது யாருக்கும் தெரியாது. எங்களுடைய உள்ளான நினைவுகள், யோசனைகள், எண்ணங்கள், தவறுகள் எல்லாம் ஒரு நாள் வெளியில் வரும். தயவு செய்து இன்றைக்கே ஆண்டவரிடம் மனந்திரும்ப வேண்டும். ஏனென்றால் இன்றைக்கு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியரங்கமாய் ஒரு குறைவும் இல்லை, ஜெபித்து அடுத்த நிமிடமே தேவை சந்திக்கப்படுகிறது. தேவையை சந்திக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்! ஆனால் ஒரு நாள் நியாயத்தீர்ப்பிலே தான் தெரியும் தேவை எப்படி சந்திக் கப்பட்டது என்று. தயவு செய்து நித்திய நியாயத்தீர்ப்புக்கு செல்ல முன்பதாக மனந்திரும்புங்கள். தேவன் தருகிற ஆவியின் வார்த்தையின் நிறைவால் நிறைந்து கொள்ளுங்கள்.

ஆவிக்குரிய தகுதி இல்லாமல் போடும், வேஷம் ஒரு நாள் எங்களைப் பாதிக்கும். ஆகவே யோசித்துப் பாருங் கள். நாங்களே எங்களுக்கு வேதனை யைக் கொண்டு வருகிற கிறிஸ்தவ வாழ்க்கையை நாங்கள் வாழ்கிறோம். **கிறிஸ்தவ வாழ்வு என்பது கிறிஸ்து சொன்னபடியே வாழ்வது. அதற்குள் சரிப்படுத்துவதற்கு வேறு எந்த மார்க்கமும் இல்லை. கிறிஸ்து சொன்ன படி எங்கள் வாழ்க்கை அமைய வேண்டும் என்றால் கிறிஸ்து சொன்ன படியே அது அமைய வேண்டும். அது தான் நிறைவான கிறிஸ்தவம்.** நீங்கள் நிறைவான கிறிஸ்தவம் வாழ்ந்து பாருங்கள், உங்களுடைய வாழ்க்கையில் ஆண்டவருடைய பிரசன்ன மும், ஆளுகையும், அவருடைய நடத்து தலும் அபரிதமாக உங்களை நோக்கி கடந்து வரும்.

**மத்தேயு 7:4-5 (4.) இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? 5. மாயக்காரனே! முன்பு உன் கண்ணி லிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப் பாய்.** உத்திரம் என்றால் வீட்டுக்கூரைக்கு வைக்கும் பெரிய வளை. கண்ணுக்குள் வளை இருக்கிறது, கண்ணுக்குள் வளை இருந்தால் எப்படி துரும்பு தெரியும். உங்களுடைய சிறிய கரம் கண்ணுக்கு முன்பு வந்தாலே ஒன்றும் தெரியாது. அந்தப் பெரிய வளை கண்ணுக்குள் இருக்கிற போது நாங்கள் கிறிஸ்தவன் என்று சொல்வோம் என்றால் நாங்கள் எங்களுக்கே அழிவைத் தேடுகிற கிறிஸ்தவ வாழ்வை வாழ்கிறோம். கண்ணுக்குள் உத்திரம் இருக்கும் போது நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்வோமாக இருந்தால் எங்களுடைய வாழ்விற்குரிய அழிவை நாங்களே தேடுகிறோம். தயவு செய்து மெய்யான பரிசுத்தமுள்ள வாழ்விற்காக எங்களுடைய வாழ்வை அர்ப்பணிப் போம். இல்லையென்றால் பூமியிலே எங்களுடைய வாழ்வின் முடிவு வேதனை யாக இல்லாவிட்டாலும் நாங்கள் ஒரு போதுமே பரலோகம் செல்ல முடியாது. **உண்மையான கிறிஸ்தவ வாழ்விற் காய் உங்களை அர்ப்பணியுங்கள். ஏனென்றால் ஆண்டவர் ஒரு நாள் எல்லா முகமூடிகளையும் கிழித்து எறிவார்.**

இந்த மனிதர்கள் பரிசுத்தமில்லா மல் பிசாசுகளைத் துரத்தப்போய் பிசாசு இவர்களுக்கு அடித்திருக்கிறது. உங்களுக்கு புரியத்தக்க வகையில் நடைமுறையில் சொல்கிறேன். ஒரு *சந்தர்ப்பத்தில் ஒருவர் எனக்கு தொலைபேசி அழைப்பெடுத்து, அண்ணா எங்களுடைய உறவின்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையார் ஒருவருக்கு பிசாசு பிடித்து, அவர் மிகவும் வேதனைப் படுகிறார், அவரைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறது, தயவு செய்து வருவீர்களா? என்று கேட்டார்கள். அந்த நேரம் ஆண்டவரிடம் சொன்னேன், ஆண்டவரே உம்முடைய இரத்தத்தால் என்னை மூடுகிறேன், என்னை அறியாமல் பாவம் என் வாழ்வில் இருந்தால் என்னை மன்னித்துக் கொள்ளும் என்று ஜெபித்துவிட்டு அங்கு சென்ற போது அவர்கள் சொன்னார்கள், அண்ணா இவர் காலை 4:30 மணிக்கு எழுந்து 4கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று கடலுக்குள் இறங்கி நின்றார். இவரை நாங்கள் தேடிப்பார்த்தும் காணவில்லை. பின்பு பார்த்தால், மாலை நேரம் அவர் கடலில் நிற்கிறார் என்று யாரோ சொன்னார்கள். ஆகவே அங்கே சென்று அவரைக் கொண்டு வந்து வைத்திருக்கிறோம் என்று. அப்போது கர்த்தர் எனக்கு ஒரு பெலத்தைக் கொடுத்தார். கர்த்தருடைய நாமத்தைச் சொன்னேன், அந்த மனிதன் முறுகிக் கொண்டிருந்தான். அவனுடைய சிநேகிதர் எல்லோரும் சற்றுத் தொலைவில் அவனைப் பிடிப்பதற்காக ஆயத்தமாக நின்றார்கள். நான் கர்த்தரிடம் சொல்லி ஜெபித்தேன், நீங்கள் நம்புகிறீர்களோ தெரியாது, குறைந்தது மூன்று நிமிடங்களில் அந்த அசுத்த ஆவி அவனைவிட்டு ஓடிவிட்டது. நான் என்னைப் பெருமைப்படுத்தவில்லை. மாறாக நாம் ஆண்டவரிடம் தகுதிப்படுத்திய பின்னர் செல்ல வேண்டும் என்பதற்காக சொல்கிறேன். எல்லா மகிமையும் கர்த்தருக்கே உண்டாகட்டும். அப்போது அந்த மனிதனுடைய சிநேகிதர் சொன்னார்கள், அண்ணா அவனால் நாங்கள் பட்டபாட்டை என்னவென்று சொல்வது. அவனுடைய சகோதரி சொன்னார்: நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டோம் என்று.

**பிரியமானவர்களே, தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை.** ஏன் அவருடைய வாழ்விற்குரிய சாட்சிகளாய் எங்களை பூரண கிறிஸ்த வர்களாய் ஆக்கும்படியாக. ஒருவேளை தவறு விட்டால், ஆண்டவரிடம் சொல்லுங்கள் நான் தவறிய பகுதியை மன்னியும் என்று. கர்த்தர் உங்களை நிரப்புவார், அபிஷேகம் பண்ணுவார். நீங்கள் தேவனுக்காக ஏதாவது ஒன்றை நன்மையாக செய்ய முடியும். உங்களுடைய சொந்த வாழ்வின் பகுதியைக் காக்கும்படி ஏன் தேவனிடம் கேட்க முடியாது. **உங்களுடைய சொந்த வாழ்வின் பகுதியை பூரணமாக வைத்திருந்தால் இன்னொருவருடைய வாழ்விற்கும் உங்களை ஆசீர்வாதமாக மாற்றுவார்.** உங்களுடைய வாழ்வில் துன்பம், வேதனை வந்தால் உடனே யோசித்துப்பாருங்கள். நான் எங்கே தவறுவிட்டுவிட்டேன், இந்த அடி எனக்கு ஏன் விழுந்தது? அசுத்த ஆவியின் தாக்கம் எனக்குள் ஏற்பட்டு விட்டதா? என்னுடைய வாழ்வில் சரியான பரிசுத்தம் இல்லாததால் கெட்ட சிந்தனை வந்ததா? அதுவும் ஒரு அசுத்த ஆவியின் தாக்கம் தான். என்னுடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயைக் காத்துக் கொள்ளாமல் போய் விட்டேனே, அதுவும் ஒரு தாக்கம்தான். பிரியமானவர்களே, கர்த்தர் எங்களை நேசிக்கிறார். ஒருவேளை கிறிஸ்தவத்தில் இருந்து விலகிப்போகிறது போல தோற்றம் வருகிறதா? ஆண்டவரே என்னை மன்னித்துக் கொள்ளும், உம்முடைய நிறைவான கிறிஸ்தவ வாழ்விற்கு என்னை அர்ப்பணிக்கிறேன் என்று ஆண்டவரிடம் கேளுங்கள். அவர் அற்புதமான காரியத்தை உங்கள் வாழ்வில் செய்வார்.

## நிறைவுள்ள விசுவாசமுள்ளவர்கள் செய்பவை

**அப்போஸ்தலர் 19:18 விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தாங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள்.** நிறைவான விசுவாசியாக இருந்தால் செய்கைகளை அறிக்கையிட்டு வெளிப்படுத்துவார்கள். அறிக்கை செய்வது என்பது பூரண விசுவாசிக்கு உள்ள ஒரு தன்மை. ஆண்டவரிடம் அறிக்கை செய்யுங்கள் அத்துடன் நீங்கள் யாருக்கு எதிராக குற்றம் செய்தீர்களோ அவர்களிடமும் அறிக்கை செய்யுங்கள். கிறிஸ்தவத்திலே பூரணமடைய வேண்டும் என்றால் ஒன்றையும் மறைத்து வைக்காதீர்கள். அறிக்கை செய்து பாருங்கள் உங்கள் விசுவாசத்தில் பூரணப்படுவீர்கள். விசுவாசி என்பதற்குரிய ஆரம்பமே "இயேசுவே நான் பாவம் செய்தேன்" என்ற அறிக்கையோடு ஆரம்பிக்கிறது. அறிக்கை செய்யப்படுகிற போது தேவனிடம் இருந்து எமக்கு மன்னிப்பு கொடுக்கப்படுகிறது.

**அப்போஸ்தலர் 19:19 மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தாங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத்தொகை பார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக் காசாகக் கண்டார்கள்.** கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு வாழுகின்ற கிறிஸ்தவர்களுக்குச் சொல்லுகின்றேன்; **உங்களுடைய வீட்டில் உங்களுக்கு எழுதப்பட்ட குறிப்பு புத்தகம் இன்னும் இருக்கிறதா? தயவு செய்து அதை சுட்டெரித்துப்போடுங்கள். நாங்கள் இரட்சிக்கப்பட்டவுடன் செய்த வேலை அவற்றையெல்லாம் கொண்டு சென்று எரித்தோம்.** அதை எரித்தால் வாழ்க்கையே எரிக்கப்பட்டதாக சிலர் கருதுவார்கள். திருமணம் என்று வருகிற போது எப்படி பொருத்தம் பார்ப்பது என்று சொல்வார்கள். ஆனால் குடும்பத்தை இணைக்கிறவர் கர்த்தர். திருமணம் கர்த்தரால் நிச்சயிக்கப்படுகிறது. சாஸ்திர புத்தகத்தால் திருமணமோ அல்லது எங்களுடைய எதிர்காலமோ நிச்சயிக்கப்படுவதில்லை. உண்மையான கிறிஸ்தவர்கள் என்றால் இது உங்களுடைய வாழ்வில் இருக்கக்கூடாது. அது இன்றைக்கும் இருந்தால் அதை உடனேயே அகற்றிவிடுங்கள். இல்லையென்றால் அது நீங்கள் பூரண கிறிஸ்தவர்களாக வாழத் தடையாக இருக்கும்.

*சிலர் பிரயாணம் செல்லும் போது பூனை குறுக்கே வந்தால் அந்தப் பிரயாணத்தைக் கைவிட்டு திரும்ப வந்துவிடுவார்கள். பூனை*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கே சென்றால் உங்களுக்கு என்ன? அதற்கு கால் இருக்கிறது, அதனால் அது செல்கிறது. ஆடு கத்தினால் ஒன்று, மாடு கத்தினால் இன்னொன்று, நாய் ஊளையிட்டால் பேய் வந்துவிட்டது என்றும் சொல்வார்கள். இவையெல்லாம் உண்மைக் கிறிஸ்தவர்கள் செய்கிற வேலைகளா? முதலாவது உங்களிடம் இருக்கிற அந்நிய தன்மைகளைச் சுட்டெரியுங்கள். பரிசுத்த ஆவியானவருக்கு இன்னொரு பெயர் சுட்டெரிக்கும் ஆவியானவர். எங்களுடைய இருதயத்தில் இருக்கிற மந்திர, தந்திர செயல்கள் அனைத்தும் சுட்டெரிக்கப்பட வேண்டும். தேவன் வெறுக்கிற நடைமுறை ஒன்றையும் உங்கள் கிறிஸ்தவ வாழ்வில் ஒரு போதும் அனுமதிக்க வேண்டாம். ஏதாவது உங்களுடைய வீடுகளில், இருதயத்தில் இருக்கும் என்றால் இன்றைக்கே அவற்றை சுட்டெரித்தால் தான் நீங்கள் உண்மையான கிறிஸ்தவர்கள். ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு அம்மாவுக்கு ஜெபிக்கும்படியாக சென்ற போது என்னுடைய உள்ளத்தில் ஒரு உணர்வு வந்தது, அப்போது அந்த அம்மாவிடம் சொன்னேன், அம்மா உங்களுடைய வீட்டில் ஏதோ ஒன்று இருக்கிறது என்று. அப்போது அவர் அதற்கு, இல்லை என்று மறுத்துவிட்டார். இல்லை இருக்கிறது என்று நான் மறுபடியும் சொன்ன போது சற்று நேரத்தில் ஆம் ஆம் இருக்கிறது என்று சொல்லி ஒரு சூட்கேசுக்குள் இருந்து ஒரு படத்தை வெளியே எடுத்தார். அதே போன்று தான் இருதயம் என்னும் சூட்கேசுக்குள் எத்தனையோ விக்கிரகங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அவற்றை எரிப்பதற்கு ஆயத்தமா?

உங்களுக்கு ஒரு மனைவி இருக்கும் போது இன்னொரு பெண்ணை நினைத்தால் அவள் தான் உங்கள் இருதயத்தின் ராணி. அந்த ராணியை இன்றைக்கே சுட்டெரிக்க வேண்டும். சிலருக்கு புருஷன் புருஷனாக இல்லை. இப்போது உன்னிடத்தில் வேறு ஒரு ராஜா இருந்தால் அந்த ராஜாவை நீ சுட்டெரிக்க வேண்டும். கர்த்தருடைய ஆவியானவர் சொல்வதைச் சொல்கிறேன். இன்றைக்கு நாம் சுத்திகரிக்க வேண்டியதை சுத்திகரிக்க வேண்டும். சிலருக்கு நீங்கள் வைத்திருக்கும் பொருள் உங்களைக் கட்டி வைத்திருக்கும். ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஒருவர் பழைய துணி ஒன்றைக் கொண்டு சென்று வாகனங்கள் நிறுத்துமிடத்தில் நிற்கும் தன்னுடைய வாகனத்தைச் சுத்தம் செய்தால் அப்படிப்பட்ட செயல் சுட்டெரிக்கப்பட வேண்டும். அப்போஸ்தலர் 19ஆம் அதிகாரத்தில் பார்க்கிற போது புத்தகங்களின் பெறுமதியைப் பார்க்காமல் அவற்றையெல்லாம் தூசியாகக்கருதி உண்மையாக மனந்திரும்பினார்கள். உண்மையான மனமாற்றம் தேவனுக்கு பிரியமில்லாத எல்லாவற்றையும் ஒன்றுமில்லை என்று நினைக்கப்பண்ணும். தேவனுக்குப் பிரியமில்லாத எவைகள் உங்கள் உள்ளத்தில் இருக்கிறதோ, இன்றைக்கே யோசியுங்கள் அவைகள் எல்லாம் ஒன்றுமில்லை.

தகுதியில்லாத கிறிஸ்தவர்களாய் இருந்தால் பிசாசு உங்களை அடிக்கும். பிசாசு உங்களை பிடித்திருந்தாலும் அது காலப்போக்கில்தான் தெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும். ஒரு அசுத்த ஆவி ஒரு மனிதனைப் பிடிக்கிற போது ஒரு சத்தமும் போடாது. ஆனால் அது அவனை விட்டுப்போகிற போது பயங்கரமாய் இருக்கும். பிரச்சினை வருகிற போது தான் தெரியும் இவ்வளவு காலமும் இவரோடு பிசாசு தான் இருந்திருக்கிறது என்பது. எங்களுடைய வாழ்வு சரியில்லை என்றால் அசுத்த ஆவி பிடித்தவுடன் தெரியாது. ஆனால் நாட்கள் வரும், அது காலம் பிந்தியதாய் போய்விடும். **எங்களுடைய சரீரமாகிய ஆலயத்தை பிசாசின் ஆலயமாக வைத்திருக்கிற போது எங்களுடைய உயிர் நாங்கள் மனந்திரும்புவதற்கு முன் போய்விட்டால் எங்களுடைய நித்தியத்தை எங்கே கழிக்கப் போகிறோம்?** உண்மையான விசுவாசி என்றால் குறிப்பு புத்தகங்களை எரித்துப் போடுங்கள். தேவனுடைய பிள்ளை என்று கூறிக்கொண்டு இன்னும் நூல்களைக் கட்டிக் கொண்டிருந்தால் இன்றைக்கே அவற்றை கழற்றி எறியுங்கள். உங்களுடைய பிள்ளைக்கு வியாதி என்று வருகிற போது அந்நியம் சார்ந்த காரியங்களை செய்கிறீர்களா? தயவு செய்து, கர்த்தாவே என்னை மன்னித்தருளும் என்று சொல்லுங்கள்.

இன்றைக்கு சுத்தமான விசுவாசிகளாய் நானும் நீங்களும் மாறவேண்டும். ஆவியின் நிறைவு நமக்குள் கடந்து வரவேண்டும். வசனத்தின் நிறைவோடும், தேவனுக்கு உண்மையான விசுவாசிகளாய் நாம் இருக்க வேண்டும். உங்களுக்குள் ஒரு மறைவும் வேண்டாம் கண்ணாடியில் காண்பது போல கண்டு அவரைப் போற்றுகிற, அவருடைய மகிமையைக் காண்கிறவர்களாக நாம் மாறவேண்டும்.

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 111

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. அபிகாயில் (Iசாமு 27:3)
04. பென்யமீன் (எஸ்தர் 2:5)
06. அகாவா (எஸ்றா 8:21)
09. யாக்கோபு (உபாக 32:9)
12. யோயாக்கீன் (IIஇராஜா 24:6)
13. எல்க்கானான் (IIசாமு 21:19)

**வலமிருந்து இடமாக**

02. காயீன் (ஆதி 4:15)
03. ஞானத்தைக் (நீதி 22:12)
05. நெகேமியா (நெகேமியா 2:18)
07. மாறுபாடோ (நீதி 15:4)
11. கழுதை (எண் 22:18)
12. யோய்தா (Iநாளா 12:27)

**மேலிருந்து கீழாக**

01. அகபு (அப்போஸ்தலர் 11:28)
02. காத்தேப்பேர் (IIஇராஜா 14:25)

**கீழிருந்து மேலாக**

08. பார்வோன் (யாத்திராகமம் 9:27)
10. கோரேஸ் (எஸ்றா 1:3)
11. கமாலியேல் (அப்போஸ்தலர் 5:34)
13. எலெயாசார் (யாத்திராகமம் 28:1)



# குறுக்கெழுத்துப் போட்டி - 111, வினா விடை - 113

## சரியான விடை எழுதியவர்கள்

**பாண்டவெட்டை**
01. மு.ஜெசிந்தா
02. சி.சிவனேஸ்வரன்
03. சி.சுமித்திரா

**வடகாடு**
04. பா.மாலா
05. ச.எப்சிபா
06. ச.எஸ்தர்

**தர்மபுரம்**
07. பி.சுடர்
08. பி.புகழ்நிலா
09. உ.யாபேஸ் *
10. த.சுஜினா

**நாவற்குழி**
11. எஸ்.லக்சாயினி +

**காரைநகர்**
12. உ.சாத்ராக்
13. அ.எஸ்தர்
14. அ.கிருசாந்தன்
15. உ.கிறேசியன்
16. த.எப்சிபா
17. அ.தெபோரா
18. நா.சிவபாக்கியம்
19. நா.கிறிஸ்ரீன்
20. நா.கிருஷன்
21. பா.அனுகரன்
22. பா.அனுசியா
23. க.தனு
24. வி.அனுராதா

**கனடா**
25. குகன் குடும்பம்

**திருநெல்வேலி**
26. ந.செல்வன்

**யாழ்ப்பாணம்**
27. எஸ்.திஸ்பியா *

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அநீதியை சகித்தல்

**வேதப்பகுதி: 1கொரிந்தியர் 8:1-10**

பள்ளிக்கூட ஆண்டு விழாவில் எல்லாரையும் விட நியூட்டன் தான் நன்றாகப் பாடினான். ஆனால் நியூட்டனுக்கு மூன்றாவது பரிசு தான் கிடைத்தது. நியூட்டனுக்கு அது மிகவும் வருத்தமாயிருந்தது. போட்டியில் மதிப்பெண்கள் வழங்கும் ஆசிரியருக்கு நியூட்டனை பிடிக்காததால் இப்படிச் செய்துவிட்டார். நியூட்டனின் தந்தை அந்த ஆசிரியரிடம் நியாயம் கேட்க வேண்டும் என்றார்.

ஆனால் நியூட்டன் ஞாயிறு பள்ளியில் கற்றதை ஞாபகம் வைத்திருந்தான். எனவே அநீதியை சகிப்பதே நல்லது என்றான். நியூட்டனின் பொறுமை அவனுடைய தந்தைக்கு மிகவும் சந்தோஷமாயிருந்தது.

சிலர் நமக்கு அநீதி செய்வார்கள். நாம் அதை சகித்துக் கொள்ள வேண்டும். கர்த்தரிடம் நம்முடைய நியாயத்தைச் சொல்ல வேண்டும். அவர் ஏற்ற வேளையில் நியாயம் செய்வார்.

**சிந்தனைக்கு:-**

**அநீதியை சகித்துக் கொள்வது கஷ்டமாயிருந்தாலும், அதனால் கர்த்தரிடத்திலிருந்து வரும் நன்மைகள் பல.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்' – ஏப்ரல் 17

## அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:.........................................

முகவரி:.........................................

.........................................

.........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது
நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக
வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு
அவரில் நிலைத்திருங்கள்.

**1யோவான் 2:28**

To:

Zion Church Office,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org